விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 சித்திரை 25 ஷஃபா 16 இதழ் 86
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-5-1985

## காரைநகர் சம்பவ விபரம்: அமிருக்கு ஆலால் விளக்கினார்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நிலைமைபற்றி தமிழ் நாட்டிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. ஏ அமிர்தலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கூட்டணி நிர்வாக செயலாளர் திரு. எம். ஆலாலசுந்தரம், நேற்றுக் காலை திரு. அமிர்தலிங்கத்துடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு, காரைநகரில் அநேகமாக எல்லோரும் அகதிகளாகும் நிலையிலுள்ளனர் எனத் தெரிவித்தார்.

காரைநகர்ல் மக்கள் அகதிகளாகியுள்ளதாகவும், தொடர்ந்து அங்கு பதற்றநிலை இருப்பதாகவும், மக்கள் அச்சமடைந்து வீடுகளை விட்டு வெளியேறிக்கொண்டிருப்பதாகவும், திரு அமிர்தலிங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

## அவுஸ்திரேலியாவுக்கு 'அமிர்' செல்கிறார்

[சென்னை]

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம்,

[6ம் பக்கம் பார்க்க]

# பாலஸ்தீன விடுதலையை அங்கீகரித்த பாணியில்
# இலங்கை இனப் பிரச்னைக்கு
# ஐ.நா. அணுகுமுறை இல்லையா?

## சத்வால் பிரியாவிடையில் தொண்டமான் அங்கலாய்ப்பு

(பெஞ்சமின்)

"பாலஸ்தீன விடுதலை இயக்கம் தனது உரிமைகளுக்காக வன்முறையில் போராட்டங்களை நடத்தி வருகின்ற போதிலும், ஐ நா. ஸ்தாபனம் அதனை அங்கீகரித்துள்ளது. இலங்கையிலும் அதிகரித்துச் செல்லும் மானிட அழிவைத் தடுக்கவும், இனப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணவும் இதுபோன்ற ஐ. நா.வின் அணுகுமுறை ஒன்று ஏற்படாதா?" என்று கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு எஸ். ஜே. எஸ். சத்வாலின் இலங்கைப் பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து அவருக்கு பிரியாவிடை வைபவமொன்று கொழும்பு 'கலதாரி' ஹோட்டலில் இடம்பெற்றது இவ்வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. தொண்டமான் தொடர்ந்து பேசியதாவது: "இலங்கை நிலைமைகள் காட்டுமிராண்டித்தனமானவையாகவும் கொடூரமானவையாகவும் இருந்து வருகின்றன.

இலங்கையும் இந்தியாவும்

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழ்ஈழம் அமைக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த மதுரை முத்து மகன் கைது

(சென்னை)

இலங்கைத்தமிழர் பிரச்னையை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த முன்னாள் மேயர் மதுரை முத்துவின் புதல்வர் எம். கருணாநிதி பொலிசாரினால் கைது செய்யப்பட்டு 15 நாள் றிமாண்டில் வைக்கப்படுள்ளார்.

மதுரை கலக்டர் காரியாலயத்துக்கு முன் இவர் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

தமிழ் ஈழத்தை உருவாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தமிழ் ஈழம் அமைப்பதற்கான தமிழர்கள் அனைவரும் ஐ[illegible]ப்படவேண்டும் என்[illegible] இவர் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்.

## காரைநகர்ப் பகுதியில் 18 கடைகள், 200 வீடுகள் அசம்பாவிதத்தில் நாசம்!

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து காரைநகர் முக்கிய நகரமான துறைமுகப்பகுதியில் 18 கடைகளும், குடிசைகள் உட்பட சுமார் 200 வீடுகளும் தாக்குதல், தீவைப்பால் நாசமாக்கப் பட்டுள்ளன.

காரைநகர் பிரசைகள்குழு பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று கணக்கெடுப்பொன்றை நேற்று மேற்டது அக்கணக்கெடுப்பின் போதே மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் தெரிய வந்துள்ளன.

(6-ம் பக்கம் பார்க்க)

## கோயில்கள், பாடசாலைகளில் ஆயிரக்கணக்கில் அகதிகள்

(ஊர்காவற்றுறை)

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலையடுத்து வேலணை, கரம்பொன், மெலிஞ்சிமுனை, சரவணை, சாட்டி, நாரந்தனை ஆகிய இடங்களிலுள்ள கோயில்களிலும், பாடசாலைகளிலும் பல தற்காலிக அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஆயிரக்கணக்கில் அகதிகள் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியி

(6ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில்

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து பதட்டநிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கும் - வடமராட்சிக்குமிடையே நடைபெற்ற மினிபஸ் போக்குவரத்துச்சேவையும் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

யாழ் நகரும் நேற்றுப் பிற்பகல் சனநடமாட்டம் அதிகமின்றிக் காணப்பட்டது.(மா)

## மட்டுநகர் அகதிகளுக்காக யாழ்ப்பாணப் பாடசாலைகளில் 9ம் திகதி நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் இடம்பெற்ற கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளைமறுதினம் 9-ம் திகதி வியாழக்கிழமை பாடசாலைகள் தோறும் நிதி திரட்டவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் குழுவின் பிரதிநிதி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்

நிதி உதவி கோரிவரும் மாணவர் பிரதிநிதிகளை அடையாளம் கண்டு தாராளமாக வாரிவழங்குமாறு பாடசாலை ஆசிரியர்களையும் மாண

(6-ம் பக்கம் பார்க்க)

## காரைநகரில்: துப்பாக்கிச்சூடு ஒருவர்பலி இருவர் காயம்

[யாழ்ப்பாணம்]

காரைநகரில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இருவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொன்னுத்துரை 55 வயது) எஸ். சிறி (16 வயது) ஆகிய

[6-ம் பக்கம் பார்க்க

## ரயில்நிலைய களஞ்சியத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். ரயில் நிலையத்தில், உள்ள களஞ்சியபகுதியில், நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதவர்களால் சில பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (க)

## இலங்கைப் படுகொலைகள் பற்றி அரச சார்பற்ற உலக ஸ்தாபனங்கள் ஆய்வுநடத்தி அறிக்கை வெளியிட சிவா கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் பரவலாக இடம்பெற்று வரும் தாக்குதல்கள், படுகொலைகள் தொடர்பாக மனித உரிமைகளில் அக்கறை கொண்டுள்ள அரசசார்பற்ற உலக ஸ்தாபனங்கள் ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிடவேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மூதூரில் காட்டுப்பகுதியில் 116 பேர் கொலையுண்டு கிடந்ததாகக் கூறப்படுவது பற்றியும் இந்த ஆய்வு இடம்பெற வேண்டுமென திரு. சிவசிதம்பரம் கோரியுள்ளார்.

ஆனால் மூதூரில் கொலையுண்ட நபர்களின் சடலங்கள் கிடந்ததாக வெளிவந்த செய்தியை இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் மறுத்துள்ளார்.

மன்னார், வவனியா முல்லைத்தீவு மற்றும் இடங்களில் இடம்பெற்ற தாக்குதல்கள், படுகொலைகள் பற்றி குறிப்பிட்டுள்ள திரு. சிவசிதம்பரம் அண்மையில் இளம் தம்பதிகள் இருவர் வீட்டில் வைத்து கொலையுண்டதுபற்றியும் தெரிவித்துள்ளார். இப்படியான ஒரு விசாரணை நடைபெறுவதை இலங்கை அரசு தடைசெய்யக் கூடாதென்றும் அவர் கேட்டுள்ளார்.

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

570491156V இலக்கமுள்ள குமாரசாமி ரகுநாதன் என்பவரது அடையாள அட்டை காணுமல் போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் 113 வேப்படி வீதி என்ற விலாசத்தில் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

3154

## விற்பனைக்கு

யாழ். விக்ரோறியா வீதியில் வீடுகட்டக்கூடிய இரண்டு பரப்புகாணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3152 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

3152

Stop பிறேக் ஓயில் விற்பனைக்குண்டு வர்த்தகர்கள். விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும்: ட்றேட் சென்ரர், Home Finanec Ltd, 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

2862

## தேவை

உமியிலிருந்து எடுக்கும் வெள்ளைச் சாம்பல் நீறு உடன் தேவை. சாம்பிள் விலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3158, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம்.

3158

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ. இல் கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட, 900 சதுர அடி விஸ்தீரணமுடைய இரண்டு மாடிக்கட்டடம் குத்தகைக்கு விடப்படவுள்ளது. விபரங்களை வை. எம். சி. ஏ. காரியதரிசியிடம் பெற்றுக் கொள்க.

3131

## காணவில்லை

பாலசிங்கம்- ரவிச்சந்திரன் புங்குடுதீவு மேற்கு ஆகிய எனது 632922272 V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ். மேற்கு மார்க்கெட்டில் காணுமல் போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் 75, மேற்கு மார்க்கெட், கஜமுக ஸ்டோர்ஸ், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

3157

## கருகம்பனை பிரஜைகள் குழு

[யாழ்ப்பாணம்]

கருகம்பனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் கருகம்பனைக் கிராமத்துக்கு ஒரு பிரஜைகள் குழு அமைக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. சு. கனகசபை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க இப்பிரஜைகள் குழு அமைக்கப்பட்டது.

ஏழுபேர்கள் கொண்ட இப்பிரஜைகள் குழுவுக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

தலைவர்:- திரு. சு. பொன் மயிலைநாதன், உப-தலைவர்:- திரு. ந பகதவத்சலன், செயலாளர்:- திரு த. கிருஷ்ணசாமி, பொருளாளர்:- திரு. ச திருச்சிற்றம்பலம், உறுப்பினர்கள்:- திரு. வே. தம்பிராசா, திரு. சு. ஜெயரத்தினம், திரு. சி. வயிரவப்பிள்ளை.

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 5393 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை மேற்கு விசுவலிங்கம் அம்பலவாணருக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 18 54?/- ரூபாவும், மேலும் இதில் 10,000/-ரூபாவக்கு 12-12-1983 முதல் 1-11-1984 வரை வருடமொன்றுக்கு 35% வீத வட்டியும் அதன் பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு 4 985/- ரூபாவும், விற்பனவுச் சலார்களும். இத்தொகையை பிரதிவாதிகளாகிய காங்கேசன் துறை, கீரிமலை வீதி, கனகர் தோட்டம் சங்கரப்பிள்ளை தம்பிராசாவிடமும் மனைவி சின்னப்பிள்ளையிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1985ம் ஆண்டு மே மீ 30உ (30-5-1985) காலை பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பழை இறை பெரியபிள்ளை புதுக்காடு அல்லது வாரி தோட்டம் நிலப்பரப்பு இரண்டும் வீடும். எல்லை: கிழக்கு காங்கேசன்துறை பட்டினசபை நிலம், வடக்கு தம்பிஐயா பெண் பாக்கியத்திருதனம், மேற்கு 15 அடி அகல ஒழுங்கை, தெற்கு சின்னத்தம்பி கைம்பெண் வள்ளிப்பிள்ளையிருதனம் இதடங்கலும். தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்காலுரித்தும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்

643, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,

(3149)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம்
(பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ்நிலையம், முல்லைத்தீவு.)



மலர்வு:

11-07-1935

மறைவு:

07-04-1985

''அன்பின் உறைவிடமே! அயராதுழைத்தவரே!
இன்னும் சில நாளில் இளைப்பாறி[illegible]
எம்மோடு எப்பொழுதும் வ ழ்வீர் என்றிருந்தோம்
ஐம்பதாம் வயது அகலுமுன்னர் எமைவிட்டு
உம் இதயநோய் பிரித்ததுவே! என்செய்வோம்
ஆருத்துயரில் ஆழ்ந்துள்ளோம்
ஆனலும், நும்ஆவி சாந்தியடைக என்று
இறைஞ்சுகின்றேம் இறைவனிடம்''

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

மனைவி, மக்கள்.

3143

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி மேரி பற்றிமா புவிராசசிங்கம்
(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி உரிமையாளர்)



தோற்றம்:

22-10-51

மறைவு:

07-04-85

''உயிருள்ளவரை எம்மை நேசித்தாய்
உதிர்ந்தபின் உன்னை மறவோம்''

அன்னரின் ஆத்ம சாந்திக்காக இன்று முல்லைத்தீவு பேதுருவானவர் ஆலயத்தில் காலை 6-30க்கும் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் மாலை 4 30 மணிக்கும் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்னரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியோருக்கும், அனுதாபந் தெரிவித்தோருக்கும் எமது நன்றி.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.

3111

உ

## தசாககிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதான வருடம் சித்திரை மாதம் 17ஆம் திகதி (29-04-85) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது தந்தை

### ஐ. இரத்தினக்குருக்கள் அவர்களின்

தசாகம்: சித்திரை மாதம் 26 ஆந் திகதி (8-5 85) புதன்கிழமை நண்பகல் 10 மணி

ஏகோதிட்டம், மாசிகம்: சித்திரை மாதம் 27 ஆந் திகதி (9-5-85) வியாழக்கிழமை

சபிண்டிகரணம்: சித்திரை மாதம் 28 ஆந் திகதி (10-5-85) வெள்ளிக்கிழமை

சுத்திபுண்ணியாகம் கிருகயக்ஞம் சமாராதனை: சித்திரை மாதம் 29 ஆந் திகதி (11-5-85) சனிக்கிழமை.

மேற்படி நடைபெறவிருக்கும் கிரியைகளிற் குடும்ப சகிதம் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

சிவன்கோவில்,
சுதுமலை.

3155

## மின்சார பாவனையாளருக்கு முக்கிய அறிவித்தல்

### யாழ். மாநகராட்சி மன்றம்

இதுவரை நடைமுறையில் இருந்துவந்த தொகை விநியோக மின்சார இறுப்புக்களும் விகிதங்களும் இலங்கை மின்சார சபையினுல் மாற்றப்பட்டிருப்பதால் இச்சபையின் மின்சார இறுப்புக்களும் விகிதங்களும் பிரதம மின் பரிசோதகரின் அங்கீகாரத்துடன் மீளாய்வுசெய்யப்பட்டு 01-03-85 தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளன என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். அவற்றில் முக்கியமானவை கீழே தரப்படுகின்றன.

சி. வீ கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

30-4-85

### மீளாய்வு செய்யப்பட்ட மின்சார விகிதங்கள்

#### பிரிவு 1 -வதிவிடத்திற்குரிய இறுப்பனவு

| | | |
|---|---|---|
| அலகுகள் | 1— 30 வரை | -/60 சத வீதம் |
| | 30—150 வரை | 1/00 சத வீதம் |
| | 150—500 வரை | 1/80 சத வீதம் |
| | 500 மேல் | 2/25 சத வீதம் |

ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 1?/-

வதிவிடத்தின் பகுதியில் வேறு நோக்கங்களுக்கு மின்சாரம் பாவிக்கப்படுமாயின் மேலதிக கட்டணமாக;

| | |
|---|---|
| 200 ச. அடி வரை | ரூ 30/- |
| 200 ச. அடி மேல் 300 ச. அடி வரை | ரூ 40/- |
| 300 ச. அடி மேல் 400 ச. அடிவரை | ரூ 50/- |

#### பிரிவு 2- சமய சம்பந்தமான இடங்கள்

| | |
|---|---|
| அலகு ஒன்று | -/60 சத வீதம் |
| ஆகக் குறைந்த கட்டணம் | 5/-ரூபா |

#### பிரிவு 3- பொது நோக்கங்களுக்கான இறுப்பு

அ. அலகு ஒன்று ரூபா 2/-வீதம்
ஆ. நிலையான கட்டணம் 1—10 கே. வி ஏ. ரூபா 20/-
10—50 கே. வி ஏ ரூபா 100/-
மின்கட்டணம் அ. ஆ இரண்டும் சேர்ந்தது.

50 கே. வி. ஏ க்கு மேலாகவென்றல்;
அ. அலகு ஒன்று 1/75 சத வீதம்
ஆ. நிலையான கட்டணம் ரூபா 200/-
இ. தேவைக்கட்டணம் ரூபா 125/- ஒரு கே வி. ஏ.க்கு
மின் கட்டணம் அ. ஆ. இ மூன்றும் சேர்ந்தது

#### பிரிவு 4- கைத்தொழில் இறுப்பு

அ. அலகு ஒன்று—1/75 சத வீதம்
ஆ. நிலையான கட்டணம் 1—10 கே வி ஏ 20/-
10-க்கு மேல் 50 கே வி ஏ. 100/-
மின் கட்டணம் அ ஆ. இரண்டும் சேர்ந்தது.
50 கே. வி ஏ.க்கு மேலாகவென்றல்;
அ. அலகு ஒன்று—1/60 சத வீதம்
ஆ. நிலையான கட்டணம் ரூபா 200/-
இ. ஆகக்கூடிய தேவைக்கட்டணம் ரூபா 100/-கே. வி ஏ.க்கு
மின்கட்டணம் அ. ஆ. இ மூன்றும் சேர்ந்தது.

#### பிரிவு 5- ஹோட்டல்கள்

அ. அலகு ஒன்று ரூபா 2-00 வீதம்
ஆ. நிலையான கட்டணம் 1—10 கே வி ஏ.க்கு ரூபா 20/-
10-க்கு மேல் 50 கே வி ஏ.க்கு ரூபா 100/-
மின் கட்டணம் அ. ஆ இரண்டும் சேர்ந்தது
50 கே. வி, ஏ.க்கு மேலாகவென்றல்:
அ. அலகு ஒன்று 1/75 சத வீதம்
ஆ. நிலையான கட்டணம் ரூபா 200/-
இ. ஆகக்கூடிய தேவைக்கட்டணம் ரூபா 150/- கே வி ஏ க்கு
மின் கட்டணம் அ. ஆ. இ. மூன்றும் சேர்ந்தது

#### பிரிவு 6- தெருவிளக்கேற்றலுக்கான இறுப்பு

#### பிரிவு 7- தற்காலிக ஒளியலங்காரங்களுக்கு

உளதாயுள்ள மானியை 1. கே வி ஏ க்கு மேற்படாமல் பயன்படுத்த — ரூபா 25/-

ஏனையவை

அ. அலகு ஒன்று 2/75 சத வீதம்
ஆ. மானி மற்றும் பொருட்களின் வாடகை கட்டணப் பெறுமதி 10%
இ. கூலியும் மேற்பார்வைச் செலவுகளும்

3153

27 MAY 1985



### மணிவாக்கு

மனிதனை மனிதனுக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல, இடையூறுகளும் துன்பங்களுமே;

—மத்தியூஸ்

## நமது நோக்கு

# காரைநகர் 'கடற்படை யுத்தம்'

தீக்க நேரத்தில் பத்திரிகைத் தணிக்கை சயற்படுவதால் இலங்கை கண்ட மிகப் பெரிய 'கடற்போர்' விபரங்கள் தெளிவாகத் தெரியவில்லை.

யாழ் நகரிலும், மாவட்டம் பூராகவும் கடந்த சனிக்கிழமை காலை காணப்பட்ட பதற்றமும் சோகமும் தமிழ்ப் போராளிகள் பலர் கொல்லப்பட்டசெய்தி காரணமாக வெனலாம். அவர்களின் போராடும் ஆற்றல் அந்த சோகத்தின் முக்கிய அம்சம் என்பது உண்மை.

இருப்பினும்இவ்வித நேரடிப் போர் நிலைமையில் மாற்றம் இருப்பதைக் கற்பிக்கிறது. கூடிய அனர்த்தங்களின் அறிகுறியென்றும் கொள்ளலாம்.

கெரில்லா யுத்தம் ஆட்சிக்கு எதிரானதால் அது வஞ்சனைக் கொலைகாரர்களின் கொடுமையென்று வர்ணிக்கப்பட்டது; அதில் வெற்றி தோல்விகிடையாது என்பதும், முற்றாக ஒழிக்கமுடியாது என்பதும், அதனை ஒழிக்க மக்கள் ஒத்துழைப்பு வேண்டுமென்றும் பாடம் பண்ணப்பட்டது.

காரைநகர் போர் நேரடித் தாக்குதல். இதில் வெற்றி தோல்விக்கு இடமுண்டு. நிச்சயம் எவருக்கும் வெற்றி என்று செல்ல முடியாத நிலையும் ஏற்படலாம். இருப்பினும் ஒரு பகுதியினருக்கே கூடிய வெற்றி என்று கொள்ளவும்,வெற்றியடைந்தவர்க்கு நட்டம் கூடிய நிலையில அதனை ஆங்கிலத்தில் Phyrric Victory என்றும், அவ்வித வெற்றியால் அதிகம் பலனில்லை என்றும் சொள்ளப்படுகிறது.

'காரைநகர் கடற்படை யுத்தம்' ஆங்கில சரித்திரத்தில் பதினேழாம் நூற்றுண்டில் நடந்த ரிறபல்கார் (Trafalgar) கடற்படை சண்டை போல இலங்கை வரலாற்றில்இடம் பெறும். பத்திரிகைத் தணிக்கை நீங்கி உள்ளதை உள்ளவாறு அறியும் சாதாரண நிலைகிட்டியதும் இப்போரின் பூரண விளைவு வெளியாகும்.

போராளிகள் பலர் கொல்லப்பட்டதும் கடற்படை வீரர் மூவர்,மாண்டதும் பலர் காயப்பட்டதும் அமைச்சு வெளியிட்ட அறிக்கை. எனவே நேரடிப்போர், ஒன்பது மணிநேரத் தாக்குதல்- உண்மைச் சம்பவங்கள்.

திட்டமிட்ட 'போரை'த் தொடங்கிய தமிழ்ப்போராளிகள், பெரும் தோல்வியைத் தழுவி இருந்தால், கடந்த சனியும் ஞாயிறும் நடைபெற்ற பொதுமக்கள் உடைமை அழிப்பும், யாழ்ப்பாணத்தில் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டதும் இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மேலதிக அழிவுகளே!

இது உண்மையானால் பயங்கரவாதத்தின் பூரண ஒழிப்பு ஆர்ம்பமானதெனலாம். ஆனல் தமிழ்ப் போராளிகளின் சாதனைகள் இதற்கு மாறு என்றல் அமைச்சு மீளாய்வு செய்வது அவசியம்.

உண்மையான பயங்கரவாதம் அதில் யார் ஈடுபட்டிருந்தபோதும் பொதுமக்களை அழிக்கின்றது; அதனை ஒழித்தல் நாட்டுக்கும் மக்களுக்கும் நலம் காரைநகரில் அடுத்த இரண்டு நாட்களும் தொடர்ந்த கொடுமைகள் போரில் வெற்றிபெற்றவர் செய்யும் கொடுமைகளல்ல.

இன்று பயங்கரவாதம் தமிழ்ப்பகுதிகளையே அழித்து, ஒழித்து வருகிறது. தமிழ்ப் போராளிகள் மேற்கொள்ளும் தாக்குதலால் சாதாரண சிங்கள மக்கள் எவரும் கொல்லப்படவில்லை.

அவர்கள் போரின் தாக்கத்தால் தமிழ்மக்கள் சிங்கள ராணுவத்தினர் கொல்லப்படுவது உண்மை. அப்பாவித் தமிழ்மக்கள் கொலையை இதுவரை ராணுவம் நடத்துகிறது. போரில் கொல்லப்பட்ட ராணுவத்துக்கு பிராயச்சித்தம் இது.

இந்த ரீதியில் காரைநகர் கடற்சண்டை என்ன கற்பிக்கின்றது?

தமிழ் பொதுமக்கள் எவ்வித தாக்குதலிலும்- கெரில்லா, நேரடி-படிப்படியாக அழிந்துபோகின்றனர்; அவர்களின வீடுவாசல் உடைமைகள் சில தீக்கும் கொள்ளைக்கும் பலியாகின்றன.

யாழ்ப்பாணத்திலும், கீழ் மாகாணத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாகின்றனர் குறிப்பாக காரைநகர் தாக்குதல் சுமார் ஆயிரம்பேரை இடம் பெயர்த்திருக்கிறது.

திட்டமிட்ட தாக்குதல் அதனைத் தொடரும் திட்டமிட்ட அழிவு, இவற்றிற்கு ஆளாகும் இங்குவாழும் தமிழ்மக்கள் தப்புவதெப்படி.

போராளிகளுக்கு மக்கள் அனுதாபம் குன்றும், பயங்கரவாதம் படிப்படியாக மடியும், களைப்பும் விரக்தியும் கொண்ட தமிழ்மக்கள்மேல் ஒரு அரசியல் தீர்வைக்கட்டி அடிக்கலாம் என்று அரசு கனவுகண்டால் அதுமயக்கத்தின் நடுக்கூறு.

'காரைநகர் கடற்போர் பக்கஞக்கு தொடர்ந்து கண்ணீரும் கம்பலையும் என்பது உண்மை. அதே சமயம் இன்றைய அரசின் 'பயங்கரவாதம்' உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்பதே தமிழ் பிரதேசங்களில் நாம் காணும் காட்சி.

தமிழர் அழிவை அனுதாபத்துடன் நோக்கும் நாடுகள் அனைத்தும் இலங்கை அரசின் ராணுவக் கொடுமைகளை நிறுத்தவிரைய வேண்டும்.

83-ல் 'கொலைகளை நிறுத்து' என்று இந்திராவிட்ட கட்டளையை இன்று அமுலாக்க வேண்டும்.

மகாநாடுகள் உடனடித் தீர்வுக்கு தடையாகலாம்.

---

உலக அரங்கில் அரசியல் காற்று மாற்றம்:

# மக்கள் வேறு; அரசு வேறு என்ற நிலை ஜனநாயகத்தில் எந்த அத்தியாயம்?

நான்கு அல்லது ஐந்து- இலங்கையில் ஆறு - வருடங்களுக்கு ஒருமுறை ஒரு ஆட்சியைத் தெரிந்துவிட்டால் அது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கிறதென்றுகொள்ள முடியாது. இன்று அமெரிக்கா, தென்ஆபிரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் கடைப்பிடிக்கும் கொள்கைகளில் இது தெளிவாகக் காணலாம்.

''தென்ஆபிரிக்காவை விடுதலை செய்''— இவ்வாறு ஒரு இயக்கம் அமெரிக்காவில் மிகத் துரிதமாக இயங்கிவருகின்றது. இந்த நூற்றுண்டின் மிகத் தீவிரமான கன்சவேட்டிவ் ஜனுதிபதி றீகனின் இரண்டாவது ஆட்சியில் இதன் வேகம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

உதடு ஒன்று சொன்னுலும் உள்ளத்தில் றீகன் இரகசியமாக அந்த நாட்டின் அடக்குமுறைகளை, இனஒதுக்கலை ஆதரித்து வருகின்றார். வெள்ளையரல்லாத ஏழை மக்களின் குடிஉரிமைகளைப் பறிக்கும் முயற்சியை றீகன் எவ்வகையிலும் தீவிரமாகஎதிர்க்கவில்லை தம்முடைய அமெரிக்க பொதுத்தேர்தலில் அமெரிக்க கறுப்பரின் வாக்கு பத்துசதவீதமே கிடைத்தது. இதற்கு ஒரு பாடம் படிப்பிக்க விரும்புவது இயல்பு. அமெரிக்க பொதுமக்களுக்கு சுதந்திரதாகம், அநீதிஒழிப்பு போன்ற அரசியல் கருத்துக்களில் பெரும் நம்பிக்கை என்றும் உண்டு. ஆனல் ஜனுதிபதிகள் எல்லோரும் லிங்கன்போல் - ஏன் ரூஸ்வெல்ட் போல நியாயம் படைத்தவர்களல்ல.

## இன்று

அமெரிக்காவின் பல பிரபல நகரங்களில், பல்கலைக் கழகங்களில் தென்அமெரிக்கக் கறுப்பருக்காக ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு, மறியல் செய்தல் போன்ற துரித நடவடிக்கைகள் பெருகி வருகின்றன.

## பொருளாதார பகிஷ்காரம்

தென்ஆபிரிக்காவைத் தண்டிக்க அமெரிக்க பொருளாதார பகிஷ்கரிப்புஒருதக்க தண்டனை அல்ல. தென்ஆபிரிக்காவின் அறுபது லட்சம் தொழிலாளர்களில் 66,000 பேர் அமெரிக்க கம்பெனிகளில் வேலை செய்கின்றனர். இவற்றில் 97 சதவீதம் முகாமையாளர் வெள்ளையரே. ஆனல் இவ்வித பகிஷ்காரம் தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சி ஓரளவிற்கு கறுப்பரின் தேசிய ஸ்தாபனத்துடன் சமாதானம் பேச உதவ வல்லது.

## இன்னெரு விபரீதம்

தென்ஆபிரிக்காவில் வெள்ளைத் தொழிலாளரின் சம்பளம் மாதம் 1290 டொலர். கறுப்பருக்கு 320 டொலர். பெரும் இரும்புத் தொழிற்சாலைகளில் கறுப்பரின் உற்பத்திப் பொருள்கள் மிக விலை குறைவு - அவர்களின் சம்பளக் குறைவே காரணம். அதனை வாங்குவதில் மக்களுக்குப் பெரும் பிரியம். இந்த ஆயாதன முதலைக் கொண்டு கடந்த பத்து வருடங்களில் இரும்புஉருக்கு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி 5000 சதவீதம். வெள்ளையர் வேலைநீக்கம் அதன் விளைவு. எனவே வெள்ளையர் அதிருப்தி கொண்டு ஆபிரிக்க சுதந்திர இயக்கத்தை மிகத் தீவிரமாக ஆதரிக்கின்றனர்.

## அமெரிக்க மாணவர்

கடந்த மாதம் அமெரிக்க மாணவர் பல்லாயிரக்கணக்கில் ஆபிரிக்க இன ஒதுக்கலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். தென்ஆபிரிக்க இன வெறி ஆட்சியை ஒழிக்க உதவும். ''மத்திய அமெரிக்காவில் தலையிடாதே'' என்பதே அமெரிக்க மாணவர் ஒரே நேரத்தில் பல பிரதானமான இடங்களில் எழுப்பிய எதிர்ப்புப் பிரசாரம் அமெரிக்க ஆட்சியை றீகன் இரண்டாவது தடவை கைப்பற்றியது உண்மை, ஆனல் அந்த ஆட்சியில் மக்கள் அளித்த கட்டளையைக் காக்க முடியாத நிலை இன்று அவருக்கு உண்டு.

## ஜெர்மனி

அமெரிக்காவின் அணு ஆயுத நடவடிக்கைகளை மேற்கு ஜெர்மன் தலைவர் ஹெல்மட்கோல் ஆதரிக்கின்றார். பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் உட்பட நேட்டோ நாடுகள் தங்கள் ஆதரவை புதுப்பித்திருக்கின்றன; ஆனல் அந்தந்த நாட்டு மக்கள் பரவலாக அமெரிக்காவின் தீவிர தலைமையைக் குறிப்பாக விண்வெளிப்போரை நிராகரிக்கின்றன. மேற்கு ஜெர்மன் மக்கள் தங்களை போருக்கு இழுக்கும் செயல் எதையும் விரும்பவில்லை. றீகனின் ஆயுதப் போட்டியை ஐரோப்பிய நாட்டு மக்கள் பரவலாக எதிர்க்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகள் பல தங்கள் பலத்தில் நம்பிக்கை சொண்டால் சோவியத் ரஷ்யாவுடன் இப்பிரச்னையைப் பேசித் தீர்க்கலாமென்ற கொள்கை பரவுகின்றது.

## கம்யூனிஸ்ட் அரசியல்

சோவித் ரஷ்யாவிலும் சீனுவிலும் இளந்தலைமுறை ஆட்சிபீடத்தில் செல்வாக்குப் பெறுகிறது.

இவ்விரு நாடுகளின் கம்யூனிஸ்ட் சித்தாந்தம் வேறுபட்ட முறையில் செயற்படுகின்றது. அதனைக் காரணமாகக் கொண்டு எழுந்த பிணக்கு இன்று பெரிதல்ல. சீனுவின் எதிரிகளுடன் ரஷ்யா கொண்டாடுவதும் ஆதரவு அளிப்பதும் இன்றைய கசப்புக்கு முக்கிய காரணம்.

அது அவ்வாருக உலகளாவிய நிலையில், மூன்றும் உலக நாடுகள் இயக்கத்துக்குப் பொதுவாக ரஷ்யா உற்சாகம் அளிக்கின்றது; அதேபோல் செஞ்சீனு, இன்றைய மாற்றங்கள் என்னவானுலும், அந்த இயக்கத்தின் போஷகர் போல 'மாவோ' ஆட்சியில் இருந்தது: இன்றுதானும் அந்தக் கொள்கையிலிருந்து அதிகம் விலகவில்மூ. தீவிரபுரட்சிகரம், தணிந்தாலும் பொது உடைமைக் கொள்கை மாற்றம் அடையாது

சீனுவை நவீனமயமாக்க அமெரிக்க உதவியைப் பெறுகிறது; ஆனல் அது ஒரு அரசியல் உறவென்று கணிக்க முடியாது. பறியில் கைவைக்க சீனு ஒருபோதும்விடாது; இளஞ்சந்ததியினர் ஆட்சி முறையில் இன்னும் இறுக்கமாகவே இருக்கும் சான்றுகள் தென்படுகின்றன. மாவோவின் சிக்கன வாழ்வு இன்றைய சீன ஆட்சிக்குப் பிடிக்கவில்லை. ரஷ்யாவில்தானும் வாழ்க்கைமுறை சிறப்புற வேண்டும்; வெளிநாடுகளின் நட்பு இருக்க வேண்டுமென்ற கொள்கை காணப்பட்டபோதும் தூய கம்யூனிஸ்ட் சித்தாந்தம் அடிப்படைக் கொள்கைகளில் ரஷ்யாவுக்கும் சீனுவுக்கும் முறிவு ஏற்படும் சாத்தியமில்லை இளம்சந்ததியினர் இன்னும் இறுக்கமாக இருப்பரென நம்ப இடமுண்டு.

— உலகம்சுற்றி

---

## சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு

# 25 வருட தலைமைப் பதவி

# நிறைவு; இன்றுவைபவங்கள்

(கொழும்பு)

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில், தொடர்ச்சியாக இருபத்தைந்து வருடங்கள், தலைமைப்பதவி வகித்த நிறைவுத்தினம், இன்ருகும்.

இந்நிகழ்ச்சிகள இன்று ஆரம்பமாகி மே மாதம் இருபத்தோராம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவர் 1960ம் ஆண்டு மே மாதம் ஏழாந்திகதி இக்கட்சியின் தலைவரானுர். தொடர்ச்சியாக இருபத்தைந்து வருடங்களாக இப்பதவியை தக்கவைத்துக்கொண்டிருக்கும் ஒரே உலகத்தலைவி சிறிமாமோ பண்டாரநாயக்கா மட்டுமே.

இவர் 1960ம் ஆண்டு ஜூலை மாதம் உலகின் முதல் பெண் பிரதமராகத் தெரிவானுர்.

கட்சியில் பல்வேறு நெருக்கடிகள் வந்தபோதிலும் அப்பிரச்னைகளுக்குமுகம்கொடுத்து பலரது பாராட்டையும் பெற்றவர் இவர்.

இன்று மாலை ஆரம்பமாகும் பிரீத் ஓதும் வைபவங்களுடன் இந்நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

(கெ)

# மின் கம்பத்தில் இறந்தவர் மனநோயாளியாம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் மின்கம்ப மரண தண்டனை பெற்றவர் என் ஒன்றுவிட்ட சகோதரர். அவர் மனநோயால் பீடிக்கப்பட்டு அங்கொடையிலும் யாழ். ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைபெற்றவர்.''

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த கனகசூரியர் ராஜசூரியர் (49 வயது) என்பவரது மரணவிசாரணையின்போது மகேஸ்வரன் என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

''சாட்சி மேலும் தெரிவித்ததாவது:

''வழக்கமாக எமது வீட்டுக்கு வந்துபோகும் ராஜசூரியர் கடந்த 29-ந் திகதி அன்று வரவில்லை. மற்றைய சகோதரர் ஜனகரத்தினத்துடன் தேடினேம். நீர்வேலிச் சந்திக் கண்மையில் மின்கம்பத்தில் ஒரு சடலம் கட்டப்பட்டிருப்பதை அறிந்து அங்கு சென்று பார்த்தோம். தலையிலும் முகத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். (மா—க)



(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி சுருக்கெழுத்தாளர் திரு வ. சிவச்சந்திரதேவன் 3ந் தர சுருக்கெழுத்தாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான போட்டிப் பரீட்சையில் ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து வேகப் பரீட்சையில் முறையே 86, 72 புள்ளிகளைப் பெற்று சாதனையை நிலை நிறுத்தியுள்ள சிவச்சந்திரதேவனே முதன் முதலாகப் போட்டிப் பரீட்சையின் மூலம் பதவி உயர்வைப்பெறும் ஒரேயொரு தமிழராவர்.

## மின் இணைப்பு வைபவம் ஒத்திவைப்பு

(வவனியா)

41 லட்சம் ரூபா செலவில் ஏற்படுத்தப்பட்ட நெடுங்கேணி மின்விநியோக ஆரம்ப வைபவம் திட்டமிட்டபடி நாளை 7ம் திகதி நடைபெற மாட்டாது என்று நெடுங்கேணி பதில் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. குணநாயகம் அறிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

மின் இணைப்பு தொடர்பான சில வேலைகள் இன்னமும் முடிவுறுத படியினுல் திட்டமிட்டபடி 7ம் திகதி மின் இணைப்பு வைபவம் இடம்பெறமாட்டாது.

# "பிரிவினைப் போராட்டத்துக்கு [redacted] முஸ்லிம்கள் எதிரானவர்களோ ஆதரவாளர்களோ அல்ல!"

## மன்சூர் மௌலாஞ கருத்து!!

(கொழும்பு)

''முஸ்லிம் மக்கள் பிரிவினைக்கோ அல்லது பிரிவினைப் போராட்டத்துக்கோ ஆதரவாளர்களுமில்லை. எதிர்ப்பாளர்களுமில்லை', என்று ஜனுப் மன்சூர் மௌலாஞ தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் பிரிவினை குறித்து இத்தகைய கருத்தினை கொண்டிருந்த போதும் தமிழ் மக்களுடன் அவர்கள் ஒற்றுமையாகவாழவே விரும்புகின்றுர்கள்.

தமிழர்-முஸ்லிம் மக்களிடையே பிரச்னைகள் மேலும் வளருமாயின் அது தமிழர் விடுதலை இயக்கங்களுக்கும், தமிழர்-முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் தமிழ்-மூஸ்லிம் குழப்பம் ஏற்பட்டுக்கொண்டிருந்த சமையத்தில் கல்முனையில் சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இதனுல்இப்பகுதியில் குழப்பம் ஏற்படாமல் தடுக்கமுடிந்தது. இதேபோன்ற சமாதான குழுக்களை எல்லாப்பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# "நிர்வாகத்திறமைமிக்க அதிபர்களின் ஓய்வினுல் கல்வித்துறைக்கு இழப்பு"

## கல்வி அதிகாரி பேச்சு

(கோப்பாய்)

''நிர்வாகத் திறமை மிக்க அதிபர்கள் ஓய்வுபெற்றுசேவையில் இருந்து வெளியேறுவது தமிழ் மக்களின் கல்வி நிலையில் எதிர்பாராத தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த வகையில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு. இராமசாமி சேவையில் இருந்து ஓய்வுபெறுவது கோப்பாய் கல்வி வட்டாரத்திற்கு பேரிழப்பாகும்.''

இவ்வாறு கூறினுர் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ வ. தங்கராசா.

சேவையிலிருந்துஓய்வுபெற்ற வசாவிளான் மத்தய மகாவித்தியாலய அதிபர் திரு. இராமசாமி அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் புதிய அதிபர் திரு. எஸ். கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கம் ஏற்பாடுசெய்த இந்த வைபவத்தில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ வ. தங்கராசா கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும் போது,

''சிலர் பதவியால் தங்களைச் சிறப்பித்துக் கொள்கின்றனர். திரு. இராமசாமியால் அதிபர் பதவி சிறப்படைந்தது.''

வெள்ளை உடையும் கள்ளமில்லா கடமை உணர்வும் கொண்ட திரு. இராமசாமி ஓய்வுபெறுவது தமிழ் இனத்தின் கல்வி வரலாற்றில் எதிர்பாராத தாக்கத்தைஏற்படுத்தி உள்ளது.

கடந்த காலங்களில் சில பாடத்துறைகளின் தேர்ச்சி நகரத்திலிருக்கும் உயர்கல்லூரிகளின் கையில் தங்கியிருந்தது. இந்த நிலையை மாற்றி கிராமப்புற பாடசாலைகளினுலும் இந்த பாடத்துறைகளில் தேர்ச்சிபெறமுடியும என்பதை திரு. இராமசாமி செயற்படுத்திக் காட்டினுர்'' எனக் கூறினுர்.

மற்றும் பலர் திரு இராமசாமியின் சேவையை பாராட்டிப் பேசினுர்.

இன்று நினைவுநாள்

# கோப்பாய்க் குணக்குரிசில் வழக்கறிஞர் வன்னியசேகரம் முத்துக்குமாரசுவாமி

குணநலமும் குலநலமும் ஒருங்கு குலவிய கொடியொன்று கோப்பாய்ப் பேரூரில் உண்டு. அக் கொடியிற் கொம்பாக விளங்கியவர் வழக்கறிஞர் வன்னியசேகரம் முத்துக்குமாரசாமி அவர்கள், அண்மையில் அரனடி அடைந்த சாந்தகுணசீலன், சமய சமூகத் தொண்டர், வழக்கறிஞர் சுப்பிரமணியர் சிவசுப்பிரமணியம் அவர்களை அண்ணன் முறையாகக்கொண்டவர் என்ருல் அமரர் முத்துக்குமாரசாமி அவர்களின் குணநிசயங்களை நன்கு புரிந்து கொள்ளலாம்,

அடக்கம், அமைதி, அலங்காரமின்மை ஒருங்கு இசைந்த ஒரு சாந்தசொரூபம் எங்கள் முத்துக்குமாரசாமி அவர்கள்.

சட்டக்கல்வி பயின்று அத்துறையில் நேர்மை நிதானம் நீதி எனும்மூவகைநல்லொழுக்கத்தால் உத்தமர் என்ற பெயர்பெற்ற எங்கள் 'முத்து' அவர்கள் ஒரு புதிய பண்பினை எடுத்தாண்டனர். சலசலப்போ கலகலப்போ இல்லாது ஆறுதலாக அமைதியாக ஆனல் ஆணித்தரமாக வழக்கு நடத்தும் ஒழுக்கத்தை ஐம்பது வருடம் கடைப்பிடித்தார் இவர் என்ருல் இது ஒரு புதிய பண்புச் சாதனையே.

இவ்வுலகில் 19-06-1911 இல் உதயமாகி எழுபத்திரண்டாண்டுகள் எவருக்கும் எவ்வகையிலும் இடரோ இன்னலோ விளைவிக்காது யாவருக்கும் அன்புதழுவிய நண்பராகவும் ஊராருககு ஆரா உதவியாகவும் உரிய காலத்திலே திருமணம் புரிந்து பதிவிரதை திருமதி அமிர்தவல்லியம்மாள் இல்லத்தரசியாக இல்வாழ்வு நல்வாழ்வாக அமைந்து எழுபத்திரண்டாம் வயதில் இவர் இறைவனடி எய்தினர்.

சமய நெறியில் அமைவு, சமூகவியலில் சுமுகம்' அரசியலில் நீதிவிரவியநெறி, இல்லறவியலில் நல்லறம் என்று எங்கள் அரிய நண்டன் வை. முத்துக்குமாரசாமி அவர்களை நாம் அனைவரும் எப்பொழுதும் எண்ண வைத்து இவர்கள் இறைவனடி எய்தி இரண்டாண்டுகள் கழிந்து விட்டன. இன்னமும் அனனரின் நன்நினைவு எங்கள் எல்லோரிடத்தும் இருக்கிறதெனின் இவர்கள் ஒரு பெரும் மனிதன் என்ற பெயருக்குரியவர் என்பது போதாகும்.

—நம. சிவப்பிரகாசம்

# சட்டவிரோத மின் பாவனை: யாழ். அரசஅதிபர் கண்டனம்!

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையிலுள்ள யாழ் மாவட்ட சபை உப அலுவலகங்களினுல் பரிபாலிக்கப்பட்டு வரும் இடங்களிலுள்ள மின் விநியோகங்களில் களவான முறையில் மின்பாவனைப் பொருத்தல்கள் இடம் பெறுவது குறித்து பெயர், விபரங்களை யாழ் அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

அவரது கோரிக்கையில், சட்டவிரோத மின் பாவனை சம்பந்தமாக போதிய அறிவித்தலை இவ்வாறுன மின் பாவனையாளர்களுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கவேண்டுமென கூறப்பட்டுள்ளது.

இச் சட்டவிரோத மின் பாவனை முறையானது பொது மக்களின் முறையான மின் பாவனைக்குக் கெடுதி விளைவிப்பதுடன், இப்பகுதியில் உபயோகிக்கப்பட்டுவரும் உப மின் நிலையங்களை சேதப்படுத்துவதுடன் பல உயிராபத்துகளை விளைவிக்கக் கூடியதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## அரியாலை அசம்பாவிதங்கள்

(கல்வியங்காடு)

அரியாலையில் அண்மையில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களின்போது 'விழுந்தவனை மாடேறி மிதிக்கும்' சிலதுக்க நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன.

வெலிக்கடைச் சிறையில் மரணமான அழகுராசா-ராஜன் என்பவரின் வீடுதீக்கிரையானதுடன் அனைத்து உடமைகளும் எரிந்து சாம்பராயின.

தம்பதிகளாக இறந்த நவரத்தினத்தின் சகோதரர் வீட்டில் உடுதுணி உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

ஒருகடையின் பூட்டு உடைத்து களவெடுக்கும் முயற்சியும் முறியடிக்கப்பட்டது. உள்ளூர் 'திருவிளையாடல்கள்' இவையென தெரியவருகிறது. (கி)

## போட்டிப் பரீட்சை

(உடுவில்)

இணுவில் அருணகிரிநாத சுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி இணுவில் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான சமய அறிவுப் போட்டிப் பரீட்சை ஒன்றை அண்மையில் நடாத்தினர்.


ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)

★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)

★ வெள்ளைச் சிமெந்து

★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)

★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 55/-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12

தொலைபேசி: 34411 — 31511



கடல் கோட்டை

( ஈழநாடு வெளியீடு )

இப்பொழுது எல்லா 'ஈழநாடு' ஏஜண்டுகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

'ஈழநாடு' வாரமலரில் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் அமோக செல்வாக்கைப் பெற்ற

செங்கை ஆழியானின்

தனித்துவப் படைப்பு

"கடல் கோட்டை"

விற்பனையாகிறது

உங்கள் பிரதிகளுக்கு உங்கள் அண்மையிலுள்ள 'ஈழநாடு' விற்பனையாளரை நாடுங்கள்.

(3125)

ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
ராஜேஸ்-சரிதா-சுரேஸ்
வனிதா நடித்த
கொலுசு
[கலர்]

ஹரன் சினிமா
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
வி தி
(கலர்)

ஸ்ரான்லி மினி
(சினிமா)
10-30, 2-30,
M. G. R. -K. R. விஜயா
நம்பியார்-அசோகன்
"தாழம்பூ"
5'X5' திரையில்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2 00
கமலஹாசன்- ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
சலங்கை ஒலி
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

றீகல்
தினசரி 10-30, 2-00
பாண்டியன், ரேவதி
நடித்த
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்
றீகல் மினி
10-30, 2-00 மட்டும்
CRVEL PASSION
(மிகக் கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

லிடோ சினிமா
"You dont Assign; You Unleash Him"
Staring
Kenwahl-Alberta Watson
in
"THE SOLDIER"

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.10
ரஜனிகாந்த் - மாதவி
நடித்த
தில்லு முல்லு
(ஈஸ்மன் கலர்)

வின்ஸர்
தினசரி 10-30, 2-00
4-15
Charlton Heston
Richard Lang
in
MOUNTAIN MEN

யாழ். வின்ஸர் மினி
தினசரி: 10-30, 2-30
7 — 9
ரஜனி, ராதா, பாலாஜி, ஜெய்சங்கர் நடித்த
இரும்புக் கை
(பாயும் புலி)
புதிய வெளியீடு

# அரியாலைப் பகுதியில் வெறிச்சோடிய நிலை!

[கல்வியங்காடு]

அரியாலை நெடுங்குளம் சந்திக் கருகாமையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களினால் பூட்டப்பட்ட அரியாலை சரஸ்வதி மத்திய நூல் நிலையம் மீண்டும் திறக்கப்படாத நிலையிலேயே இருக்கிறது.

அரியாலைச் சம்யவத்தில் இந்த நூல் நிலையத்தின் பின்புறக் கதவினை உடைத்து உட்சென்றவர்கள் இந்நூலகத்தின் தளபாடங்களைச் சேதப்படுத்தியதுடன் பெறுமதிமிக்க நூல்கள் இருந்த பெரிய அலுமாரியினையும் உடைத்துப் புத்தகங்களைச் சிதறிச் சின்னாபின்னப்படுத்தியதே இச்சனசமூக நிலையம் திறக்கப்படாமல் இருப்பதற்குக் காரணமெனத் தெரியவருகிறது

இத்துடன் தபால்கட்டை புதிய சந்தை இதுவரை கூடவில்லை வியாபாரிகள் வருவது குறைவு இச்சந்தியிலுள்ளகடைகள் பூட்டப்பட்டநிலையிலேயே இருக்கின்றன.

கண்டி பிரதான வீதியில் உள்ள வீட்டுக்காரர் பலர் இன்னமும் தமது வீடுகளுக்குக் குடியிருக்க வரவில்லை. அமைதியான நிலையிலேயே அரியாலை நகரம் உள்ளது.

# கிழக்கு சம்பவம்

# விசாரணைக் கமிஷன் அமைக்க கோரிக்கை

(மட்டக்களப்பு)

"கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசாரணைக்கமிஷன்ஒன்று அமைக்கப்படவேண்டும்" என்று மட்டக்களப்பு திருமலை மாவட்டங்களின் ஆயர் வண. பிரான்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், பிரதி அமைச்சர் அப்துல் மஜீத் அமைச்சர் பாக்கீர்மாக்கார், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனிமுத்து ஆகியோரும் கலந்துகொண்டனர்

# அச்சுவேலி தபாலக இடமாற்றத்துக்கு எதிர்ப்பு

(கோப்பாய்)

அச்சுவேலி தபால் நிலையக் கட்டடத்தை இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து பல்வேறு பொது ஸ்தாபனங்கள் தபால் தொடர்புகள் அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தனித்தனியாக மகஜர்களை அனுப்பிவைத்துள்ளது

அச்சுவேலி தபால் நிலையம் தற்பொழுது அச்சுவேலி-பலாலி வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் பல வருடங்களாக செயல்பட்டு வருகின்றது இந்தக்கட்டடத்தை வேறு ஒருவர் விலைக்கு கொள்வனவு செய்ததைஅடுத்து தபால் நிலையத்தை மூடச் செய்து தனது பயன்பாட்டிற்கு மீளப்பெறுவதற்கு ஏற்பாடு செய்துவருவதாகவும் இந்த முயற்சியினால் அச்சுவேலி, பத்தமேனி, இடைக்காடு வளலாய், புத்தூர், ஆவரங்கால் பகுதி மக்கள் பெரும்சிரமத்தையும் பல்வேறு கஷ்டங்களையும் தினந்தோறும் அனுபவிக்கவேண்டி இருப்பதனால் பொதுமக்களின் வசதியை முன்னிட்டு தொடர்ந்தும் அதே கட்டடத்தில் அச்சுவேலி தபால்நிலையம் செயற்பட ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி லயன்ஸ் கழகம் அச்சுவேலி பிரஜைகள் குழு, பத்தமேனி இடைக்காடு பிரஜைகள் குழு, பல்வேறு சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் குழுக்கள் என்பன தனித்தனியாக மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது

இந்த மகஜர்களின் பிரதிகள் தபால் தொடர்புகள் அமைச்சர், ஜனதிபதி யாழ் மாவட்ட அமைச்சர், தபால் மா அதிபர், வடபிராந்திய தபால் அத்தியட்சகர், அச்சுவேலி தபால் நிலைய அதிபர் ஆகியோருக்கு பல்லாயிரக் கணக்கான பொதுமக்களின் கையொப்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# வர்த்தகரை விடுதலை செய்யக் கோரி கைதடியில் கடையடைப்பு!

(சாவகச்சேரி)

கொழும்பு-யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகரும், கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திரு. கே. எஸ், பொன்னம்பலத்தை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதை ஆட்சேபித்து கைதடியிலுள்ள தனியார் வர்த்தக தாபனங்களும், கூட்டுறவுச்சங்கமும் நேற்றையதினம் முழு நாள் கடையடைப்பை மேற்கொண்டன.

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலைகளில் விற்பனை செய்து அவர்களின் கஷ்டங்களைப்போக்க உதவிசெய்த இவ்வர்த்தகரை நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யுமாறு கைதடிப் பொதுமக்களும் மற்றும் கைதடியைச் சேர்ந்த தனியார்துறை வர்த்தகர்களும் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலய அதிபராக கடந்த ஆறு ஆண்டுகளாக கடமையாற்றிய திரு ச. சிதம்பரப்பிள்ளை தமது 30 வருட ஆசிரியர் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் சைவப்பாடசாலை காரைநகர் மெய்கண்டான் வித்தியாசாலை சுழிபுரம் மேற்கு திருவடிநிலை சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றின் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

# ஆறுதல்

[கல்வியங்காடு]

அரியாலையில் நடைபெற்ற அண்மைச் சம்பவங்களின் போது எரிக்கப்பட்ட வீடுகளையும், உடைமைகளை இழந்தோர்களையும் அரியாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், சனசமூக நிலைய நிர்வாகிகளும், அரியாலை கிராம சேவகர்களும் சென்று பார்வையிட்டபின் ஆறுதல் கூறியதுடன் ஆவன செய்வதாகவும் வாக்குறுதி அளித்துள்ளனர்.

# நெடுங்கேணியில் விளையாட்டுப் போட்டி

(வவனியா)

நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்கான விளையாட்டுப் போட்டி நாளை 7 ம் திகதி நெடுங்கேணியில் நடைபெறும்.

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் இப்போட்டி இடம் பெறுகின்றது

இவ் வைபவத்திற்கு நெடுகேணி பதில் உதவி அரச அதிபர் திரு. ஆ குணநாயகம் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக வவனியா அரசாங்க அதிபர் திரு கே. ஸி. லோகேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்

விளையாட்டு போட்டி தொடர்பான ஏற்பாடுகளை நெடுங்கேணி விளையாட்டு அதிகாரி திரு கே. நடராஜா செய்து வருகின்றார்.

S T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
மு. ப 10-30 2-00 பி. ப.
அறிமுகம் ரகுராணி
குயிலே! குயிலே

4-30 P M.
EXORCIST
(Horror Film)

மொடேர்ண்
மினி சினிமா
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்)
30-4-85 முதல்
ALICE GOOD BODY
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
10-30, 2-15, 4-15

# 'என்தம்பியை யார் சுட்டதென்று தெரியாது'

(யாழ்ப்பாணம்)

"ஐஸ்பழம் விற்பவரான எனது தம்பி சம்பவதினம் இரவு 8 மணிக்குத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர். அவரை யார் சுட்டாரெனத் தெரியவில்லை"

யாழ். பிரதான வீதியைச் சேர்ந்த சதாசிவம் கணேசமூர்த்தியின் (23 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த சகோதாரான புங்குடுதீவைச் சேர்ந்த சதாசிவம் விநாயகமூர்த்தி மேற்கண்டமாறு கூறினர்.

யாழ் உத்தியோகப்பற்றற்ற நீதவான் அன்ரனி மரணவிசாரணை நடத்தினர்.

விநாயகமூர்த்தி மேலும் சாட்சியமளிக்கையில், தனது சகோதரன் இரவு 8 மணிக்குத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்ததாகவும், தான் ஆஸ்பத்திரிக்குச் சென்று அடையாளம் காட்டியதாகவும் கூறினர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, தீர்ப்பு வழங்குவது ஒத்திப்போடப்பட்டது.

(க)

# வேளாங்கன்னி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளவில் அன்னை வேளாங்கன்னி மாதா திருச் சொரூபம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது கடந்த சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற இத்திருச்சொரூபஸ்தான வைபவத்தில் சில்லாலை பங்குத்தந்தை, வண பிதா. இருதயதாஸ், மாதகல் பங்குத்தந்தை வண பிதா. கிங்ஸ்லி சந்தியாப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு செப ஆராதனைகளை நிறைவேற்றினர்கள். பெருந்தொகையான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

# திருவடி பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்-பழைய வீதி ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச் சைவச் சிறுவர்கள் புதிய ஆச்சிரமத் திறப்பு விழாவும், திருவடிப் பிரதிஷ்டை-பூசையும் சித்திராபூரணை அன்று நிகழ்வுற்றன இவ் விழாவில் அமெரிக்க சைவசித்தாந்த திருச்சபை அமைச்சரும், இலங்கைப் பிரதிநிதியுமான கலாநிதி எஸ் சண்முகசுந்தரம் உட்படப் பலர் பங்கு கொண்டு உரையாற்றினர்கள்.

# மீண்டும் பூஜை வழிபாடுகள்

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பிராயச்சித்த கும்பாபிஷேகம்ஆலய வழிபடுவோர் சங்கத்தின் ஆதரவில் கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்றது ஒன்பது ஆண்டுகளாக இறைவழிபாடு எதுவுமின்றி இந்த ஆலயம் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. சுமார் நான்கு இலட்சம் ரூபா செலவில் இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மக்கள் சிரமம்

[கல்வியங்காடு]

யாழ் காணிப் பதிவகத்தில் உறுதிகளின் இணைப் பிரதிகள் இல்லாமையினால் மக்கள் சிரமப்படுவதாகத் தெரிகிறது.

1940—1985 வரையிலான இணைப்பிரதிகள் பாதுகாப்புக் கருதிப் பிறிதொரு இடத்தில் இருப்பதே அன்றாடம் காணி சம்பந்தப்பட்ட விடயங்களைச் செய்யச் சிரமமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

# புதியகட்டிட வேலைகள்பூர்த்தி

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தில் 80 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட புதிய வகுப்பறை மண்டபத்தின் கட்டடவேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளள. மிகுந்த இடநெருக்கடி நிலவிவந்த இந்த பாடசாலையில் இக்கட்டடம் திறக்கப்பட்டதும மாணவர்களின் இடநெருக்கடி ஓரளவு நீங்கிவிடும் என்றும், தற்போது இப்பாடசாலையில் 431 மாணவமாணவிகள் கல்வி கற்று வருவதாகவும் வித்தியாலய அதிபர் திரு. விருத்தாசலம் தெரிவித்தார்.

# தாக்கியவர்களைப் பிடிக்க எம்.பி. உதவினார்!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று தைக்கா நகரில் நேற்று முன்தினம் காலை பஸ்ஸில் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் நான்கு நபர்களால் பலத்த தாக்குதலுக் குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பொத்துவில் 2-வது எம் பி. ஜனாப் உதுமான்லெப்பைக்கு தெரியப்படுத்தியதும் அவர் ஸ்தலத்துக்குச் சென்று குறிப்பிட்ட நால்வரையும் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பதட்ட நிலை ஏற்பட்டதாகவும் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பகுதிகளில் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இப்பொழுது எதுவித அசம்பாவித சம்பவமும் நிகழவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## வர்த்தகர் சங்கம் இன்று முடிவு

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர் கே எஸ். பொன்னம்பலம் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாக யாழ். வர்த்தக சங்கம் இன்று கூடி அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யவிருக்கிறது.

## வீட்டில் கொள்ளை

[வவனியா]

வவனியா கோவில் புதுக்குளத்தில் இரத்தினம் என்பவர் வீட்டில் நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத 8 பேர் துப்பாக்கிகளுடன்சென்று 'டீசல்' கேட்டதாகவும், பின் கொள்ளையடித்ததாகவும் கூறப்படுகிறது.

## பரீட்சை ஒத்திவைப்பு மாணவர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுநடைபெறவிருந்த விஞ்ஞானபீட அரை ஆண்டுக்கான பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பரீட்சார்த்திகள் அதிருப்தியுடன் விடுதிரும்ப நேரிட்டதாம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி இப்பரீட்சை 6-ம் திகதி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் நேற்று பல்கலைக்கழகத்துக்கு சமுகமளித்திருந்ததாகவும், இப்பரீட்சை கல்வி இறுதி ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதாகும் தெரிகின்றது (மா)

## மீண்டும் டீசல் பிரச்னை

(யாழ்ப்பாணம்)

டீசல் இல்லாததினால் நேற்றும் யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை நடைபெறவில்லை.

யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களை சேர்ந்த பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. தனியார் பஸ்களும் நேற்று குறைவாகவே காணப்பட்டன. (க)

## இலங்கை இனப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்னை விடயத்தில் கூட்டாக இயங்க வேண்டும் அவை இது தொடர்பாக சர்வதேச அங்கீகாரதலைதயுப் பெற வேண்டும்.

இனப்பிரச்னை விடயத்தில் இவ்விருநாடுகளும் விடுத்துள்ள சில அறிக்கைகள் புரியாத புதிராகவுள்ளன.

இலங்கையுடன் இனப்பிரச்னை தொடர்பாக இந்தியா நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளது. ஆனால் இலங்கை அதிகாரிகள் இப்பிரச்னையை ஒருசாதாரண உள்ளூர்பிரச்னையாகவே கருதி வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் திரு ரஜீவ்காந்தி, சுரங்கத்தின் இறுதியில் ஒளி தெரியும்என்று கூறியுள்ளார். ஆனால் இலங்கை விடயத்தில் இருள் அதிகரித்து சுரங்கம் நீண்டு கொண்டு போகிறதே தவிர ஒளியைக் காணமுடியவில்லை என்றார்.

திரு. சத்வால் பேசுகையில் கூறியதாவது;- ''இலங்கையில் தான் கழித்த நாட்கள் நினைவை விட்டகலாதவை இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைக்கும்'' என்றார்

அவர் மேலும், பாதகமான சூழ்நிலை காரணமாக தலைமன்னார். இராமேஸ்வரம் கப்பல் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும், ஆனால் இன்னும் சில வாரங்களில் கொழும்பு, தூத்துக்குடி கப்பல்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார். (கி)

## மரண அறிவித்தல்

**பார்பரா தங்கம் சவுந்தரநாயகம்**

சில்லாலையைச் சேர்ந்த பார்பரா தங்கம் சவுந்தரநாயகம் காலமாகிவிட்டார். இவர் பிரான்சிஸ் சவுந்தரநாயகத்தின் அன்பு மனைவியும்; சுநேந்திராவின் அன்புத் தாயாரும்; நீக்கலஸ் (மனேச்சர்) சிசிலியாவின் அருமை மகளும், இரஞ்சிதம், கமலா, சொர்ணம், பரிமளம், இராசசூரியர், அரசசூரியர், சிஸ்ரர் நவத்திரேஸ் (திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்), புஸ்பம், றேமசூரியர், விஜயசூரியர், குணசூரியர் ஆகியோரின் சகோதரியும், ஜெயரட்ணம், பஸ்ரியன், ஸ்ரனிஸ்லாஸ், வில்லியம், மணி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக (7-5-85) இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு சில்லாலைச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 3150

# கருணாநிதியின் கோரிக்கை மேலும் சிக்கலை ஏற்படுத்தும்!

## நம்பூதிரிபாட் கூறுகிறார்

(சென்னை)

''இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு இந்தியா ராணுவத்தை அனுப்பவேண்டுமென்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறுவது பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக மேலும் பல சிக்கல்களையே ஏற்படுத்தும் என்று தமிழ்நாடுமாக்சிஸ்ட்கம்யூனிஸ் கட்சியின் பொதுச்செயலாளர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் கூறியுள்ளார்.

நேற்றுச் சென்னையில் பத்திரிகையாளர்களிடம் அவர் இதைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் விட்டு கொடுத்து சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்து நாட்டின் ஒற்றுமையைக் காக்க வேண்டும், அப்பொழுதுதான் இனப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியும்'' என்றார். (து)

## அவுஸ்திரேலியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தவாரம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

அவுஸ்திரேலியா செல்லும் திரு. அமிர்தலிங்கம், அங்குள்ள அரசாங்க உயர் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கைத் தமிழர்நிலை குறித்து விரிவாக எடுத்துக் கூறுவார்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அவுஸ்திரேலியவில் இருக்கும் தமிழர்களையும் சந்தித்து உரையாடுவதுடன். இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கான நடவடிக்கையிலும் ஈடுபடுவார் என்று கூறப்படுகிறது.

திரு. அமிர்தலிங்கம்அவுஸ்திரேலியா செல்லுமுன்னர் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யவிருக்கும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவையும், திரு பார்த்தசாரதியையும் சந்தித்து உரையாடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கோயில்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள கடைகள் அனைத்தும் பதட்டநிலை காரணமாகமூடப்பட்டுள்ளன. இந்நகர் முற்றிலும் வெறிச்சோடி மயான அமைதியுடன் காண[illegible]றது இதனால் இப்பகுதிகளில் உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

யாழ் நகருடனான போக்குவரத்தும் முற்றிலும் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளதால் இப்பகுதி வெளித் தொடர்பற்ற பிரதேசமாகியுள்ளது. [க]

## 18 கடைகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாலக்காடுசந்தி, நீலன்காடு, காரைநகர்த் துறைமுகப் ஆகிய இடங்கள் ஜனநடமாட்டம் இன்றி சோலை இழந்து காணப்படுவதாகப் பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தோப்புக்காடு, ஊரிக்காடு வேரப்பிட்டி, பாலக்காடு, நீலன்காடு பகுதிகளில் வசித்த மக்களே குடிபெயர்ந்து வட்டுக்கோட்டைத் தொகுதிக்குச் சென்றதாகவும் அவர் சொன்னார்.

சுமார் 4,500 பேர் பாடசாலை, ஆலயங்களிலும் 1 500 பேர் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிக்கப்பட்ட வீடுகள், கடைகளிலிருந்து பல லட்சக் கணக்கான பொருட்கள் காணமல் போயுள்ளதாகவும் காரைநகர் சீநோர் தொழிற்சாலையில் ஒரு பகுதிக் கட்டிடமும், நூல் நிலையம் இயங்கிவந்த பெரிய கட்டிடமும் முற்றாக எரிந்து விட்டதாகவும் பிரஜைகள்குழு உறுப்பினர் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை முன்னாள் எம் பி. திரு. நீலன் திருச்செல்வத்தின் வேண்டுகோளுக்கமையவே, காரைநகர் பிரஜைகள் குழு பாதிக்கப்பட்ட நிலபரம் பற்றிய தகவல்களைத் திரட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

### காணிக்கந்தோர் ஆவணங்களை

## மீண்டும் பழைய இடத்துக்கே கொண்டுவரக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கோட்டைக்குள் எடுத்துச் செல்லப்பட்டுள்ள காணிக்கந்தோருக்குரிய பதிவேடுகள் மற்றும் உறுதிஇணைப்புப் பிரதிகள் போன்ற ஆவணங்களை மீண்டும் காணிக்கந்தோருக்குத் திருப்பிக் கொண்டுவரவேண்டும் என யாழ். பிரஜைகள் குழு யாழ். அரச அதிபர் திரு பஞ்சலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஆவணங்கள் கோட்டைக்குள் இருப்பதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும், காணிகளை ஈடுவைப்பதற்கு அல்லது விற்பதற்கு இந்த் ஆவணங்கள் தேவைப்படுகின்றன வென்றும் பிரஜைகள் குழு அரச அதிபரிடம் எடுத்துக் கூறியுள்ளது.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக அரசஅதிபர் பிரஜைகள் குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

## சுடப்பட்டு காயமுற்றார்

[வவனியா]

வவனியா பூந்தோட்டம் என்ற இடத்தில் 26 வயதான 'பாலா' என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

இனந்தெரியாத கோஷ்டியினர் இவரை சுட்டதாக கூறப்படுகிறது. இவர் அனுராதபுரம் அனுப்பப்பட்டுள்ளார். (க)

## காரைநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் காயமடைந்தவர்களாவர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கிளி [45 வயது] என்பவர் ஸ்தலத்திலேயே பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## யாழ். பாடசாலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வர்களையும் அப்பிரதிநிதி கேட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிதி சேகரிப்பு அன்று மட்டும்தான் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

### 2 லட்சம் சேகரிப்பு

கடந்த வாரம் பொதுமக்களிடமிருந்து சுமார் 2 லட்சம் ரூபாவை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சேகரித்துள்ளதாகத் தெரிவித்த மாணவர் பிரதிநிதி இக்கஷ்டமான காலகட்டத்தில் நிதி உதவி வழங்கிய மக்களுக்கு பாராட்டுத் தெரிவித்தார். [மா]

## யாழ்தேவி கிளிநொச்சி வரை

(யாழ்ப்பாணம்)

மறு அறிவித்தல் வரை 'யாழ்தேவி' ரயில்சேவை இன்றிலிருந்து கிளிநொச்சி வரையே இடம் பெறும்.

வழமைபோல் தினமும் காலை 11-30 மணிக்கு 'யாழ்தேவி' அங்கு வரும். தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு அங்கிருந்து கொழும்பு புறப்படும். (கி)

## அகதிகள் சுகவீனம்

(மட்டக்களப்பு]

அக்கரைப்பற்று இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையில் தங்கியிருக்கும் அகதிகளில் பலர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு அட்டாளைச்சேனை 'யுனெஸ்கோ கழகம்' இலவசசிகிச்சை மேற்கொண்டுள்ளதாகவும் இம்மாதம் 9-ம் திகதிவரை இச்சிகிச்சையளிக்கப்படவுள்ளதாகவும் அக்கழகத்தலைவர் ஜனாப் எம். எம் நிஸாம்டீன் தெரிவித்துள்ளார். (மா)

## மரண அறிவித்தல்

**வைத்தியகலாநிதி மு. சண்முகதாசா**

MBBS (Ceylon) M.D (Medicine) M.D. (Haematology) M.D. (Oncology)

வைத்தியகலாநிதி மு. சண்முகதாசா அமெரிக்காவில் அகாலமரணமானார். இவர் முத்துகிருஷ்ணபிள்ளை இராசமணியின் அன்பு மகனும், சிவலோகநாயகியின் அன்புக்கணவரும், வைத்தியகலாநிதி கோவர்தனராசாவின் (திருகோணமலை) அன்புச் சகோதரரும் மோகனராணியின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற செகராசசிங்கம் பத்மாவதியின் அருமை மருமருகனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் புதன்கிழமை (8-5-85) Floridaவில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மு. முத்துக்கிருஷ்ணபிள்ளை.

88/9, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (3159)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box 49. Telegram Eelanadu, Telephone. 22389-24126